17

5790 SPECIAL SUPPLEMENT. Oct Nov Dec 195

கிருஷிகன்

(கிராம முன்னேற்ற இதழ்)

வருட சந்தா 3 ரூபாய்

பயிர்த்தொழில் பண்ணை

மாத வெளியீடு

தனி பிரதி 4 அணா

"கிருஷிகன்"

(சந்தா முதலிய பொது விதிகள்)

1. கிருஷிகன் பத்திரிகைக்கு எந்த மாதத்தில் சந்தா அனுப்பியபோதிலும் அந்த வருஷம் ஜனவரி (தை) மாதத்திலிருந்துதான் கணக்கு வைத்துக்கொள்ளப்படும்.

2. ஒரு வருடத்துக்கு குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சந்தா தொகைகளை மணியார்டர் மூலமாகவோ அல்லது நேரிலோ செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவேண்டும்.

3. V. P. P. மூலமாக பத்திரிகையை பெற விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு 0—6—6 முன்னதாகவே ஸ்டாம்புகள் அனுப்பினாலன்றி V. P. P. மூலமாக பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

4. "கிருஷிகன்" பத்திரிகை பிரதி (தமிழ்மீ 1௳) ஆங்கிலமீ 15௳ இங்கிருந்து அனுப்பப்படும். குறிப்பிட்ட காலத்தில் பத்திரிகை சேரா விட்டால் காரியாலயத்திற்கு ஷை விஷயத்தை உடன் தெரிவித்தால் அதைப்பற்றி கவனிக்கப்படும். 7 தினங்களுக்கு பிறகு வரும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டாது.

5. விவசாயி, விவசாயம், கைத்தொழில், கிராம முன்னேற்றம் அதைச் சார்ந்த விஷயங்களும் தவிர மற்ற விஷயங்கள் இப்பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. கட்டுரைகள், அனுப்புகிறவர்கள் ஸ்டாம்புகள் வைத்து அனுப்பினாலன்றி அங்கீகரிக்கப்படாத கட்டுரைகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது.

7. கிருஷிகன் காரியாலயத்திற்கு கடிதம் எழுதும்போது தங்கள் சந்தா நம்பரை குறிப்பிட்டு எழுதவேண்டும். கட்டுரைகள் சம்பந்தப்பட்டவைகளை ஆசிரியருக்கும், மற்றவைகள் மானேஜருக்கும் எழுதப்படவேண்டும்.

8. கட்டுரைகள் தெளிவாக, ஒரே பக்கத்தில் எழுதவேண்டும். பிரசுரிக்கப்படும் கட்டுரைகள் கிருஷிகன் காரியாலயத்தாருக்கு சொந்தமானதாகும். அங்கீகரிக்கப்படும் கட்டுரைகளுக்கு ஆசிரியர் உசிதம்போல் சன்மானம் ரொக்கமாகவோ, விவசாய கருவிகள், விதைகள், செடிகளாகவோ கொடுக்கப்படும்.

9. கிருஷிகன் சந்தாதார்களுக்கு நமது பண்ணையிலிருந்து வாங்கும் சொந்த வெளியீடுகளுக்கும், விதைகளுக்கும் $6\frac{1}{4}\%$ கழிவு தரப்படும்.

10. கிருஷிகனில் வெளிவரும் விஷயங்களை எவரும் அனுமதியின்றி பிரசுரிக்கக்கூடாது.

மானேஜர், கிருஷிகன் காரியாலயம்

பயிர்த்தொழில் பண்ணை

ஹனுமந்தபுரம் : அன்னியூர் P. O. : விழுப்புரம் S. I. R.

தந்தி: "பயிர்த்தொழில்பண்ணை" விழுப்புரம். தபால் பெட்டி நெ.

கிருஷிகன்

(கிராம முன்னேற்ற மாத பத்திரிகை)

(பயிர்த்தொழில் பண்ணை வெளியீடு)

ஹனுமந்தபுரம். அன்னியூர் P. O. விழுப்புரம் S. I. R.

ஆசிரியர்: A. S. வெங்கட்ராவ்.

Ref. No. K. J. 1852/52. தேதி 15—10—1952.

ஸ்ரீ தலைவர் அவர்கள்,

முனிசிபல் கௌன்சில்/ஜில்லா போர்டு/பஞ்சாயத்து போர்டு.

அன்புள்ள ஐயா,

விஷயம்:—வனமகோற்சவ வெளியீடு—கிருஷிகன்.

சந்தா செலுத்துதல்—வேண்டுகோள்.

இத்துடன் நமது பண்ணையின் வெளியீடான கிருஷிகன் வனமகோற்சவ (பொங்கல் & குடியரசு) மலரின் விசேஷ அனுபந்தம் ஒன்றையும் தங்களுக்கு அனுப்பிக்கொண்டுள்ளோம். நமது நாட்டின் முன்னேற்றத்திற்கு வனவளத்தை விருத்திசெய்வது எவ்வளவு இன்றியமையாததென்பதை விளக்கி பல அரிய கட்டுரைகளையும் குறிப்புகளையும கொண்டுள்ள இவ்விதழ், தங்கள் ஆதீனத்திலுள்ள வாசகசாலைகள், பள்ளிக்கூடங்கள் ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு அவசியமானதென்பதை அவ்விதழின் பொருளடக்கத்தை பார்த்தாலே விளங்கும் தங்கள் ஆதினத்திலுள்ள ஒவ்வொரு பாடசாலைக்கும் வாசகசாலைகளுக்கும், சாலை பாராமரிப்பு சிப்பந்திகளுக்கும் தேவையான பிரதிகளுக்கு முன்னதாக ஆர்டர் கொடுத்தும், தங்கள் ஆதீனத்திலுள்ள வாசகசாலைகளுக்கும் தேவையான கிருஷிகன் பிரதிகளுக்கு சந்தா தொகையை அனுப்பிக்கொடுத்தும் நமது கிருஷிகனையும் இதர வெளியீடுகளையும் ஆதரிக்க கேட்டுக்கொள்ளுகிறோம்.

நமது கிருஷிகன் பத்திரிகையை ஆதரிப்பதின்மூலம் உணவு உற்பத்திக்கும் உதவி செய்தலும், அதற்காக எங்கள் சேவையை மேலும் தீவிரமாக செய்வதற்கான ஊக்கமளிப்பதாகும். ஆகவே எங்கள் கிருஷிகனுக்கு இயன்ற ஆதரவு அளிக்க கோருகிறோம்.

இத்துடன் மகா-ள-ள-ஸ்ரீ கல்வி இலாகா டைரக்டர் அவர்களின் R. O. C 736 N/51 உத்தரவின் நகலும், மகா-ள-ள-ஸ்ரீ லோகல் போர்டுகளின் இன்ஸ்பெக்டர் அவர்களின் L. Dis. 37568/51 உத்தரவின் நகலும் இத்துடன் அடக்கம் செய்துள்ளோம். வணக்கம்.

தங்கள் உண்மையுள்ள,

(Sd.) A. S. வெங்கட்ராவ்,

ஆசிரியர்.

PROCEEDINGS OF THE DIRECTOR OF PUBLIC INSTRUCTION, MADRAS

Roc. No. 736 N/51 dated 7-9-1951

Sub :—Libraries — Public — Inclusion of 'KRISHIKAN' Tamil monthly in the list of magazines and periodicals approved for use—Sanctioned

Read :—Again Directors Proceedings Roc. 92-J/49 dated 25—1—50

The Director Sanctions the inclusion of the following Journal in the list of magazines and periodicals appended to the proceedings read above.

"Krishikan" Tamil Monthly Journal
Edited and Published by
A. S. Venkata Rao (Payirthozil Pannai)
Hanumanthapuram Anniyur P. O.
Villupuram S. I. R.

(Sd.) L. BULLAYYA
for Director of Public Instruction.

True Copy / Forwarded / By Order

(Sd.) N. C. SRINIVASAN
Superintendant.

To the Divisional Inspectors of Schools
To the District Educational Officers
To the Inspectresses of Girls Sshools
To the Special Officer for Education, Pudukottai
Copy to the Presidents of District Boards
Copy to the Commissioners of Municipalities, through the Chairman concerned
Copy to Sri A. S. Venkata Rao, Editor "Krishikan"
(170 copies)
Copy to N. Sec.

(True copy)

COPY OF THE ORDER OF THE INSPECTOR OF ML-COUNCILS & LOCAL BOARDS, MADRAS

L. Dis. 37568/51 dated 22—8—51

Under Sec. 51 (1) of the Madras Village Panchayat Act 1950, Panchayats may Subscribe for any Journal without outside sanction, if they maintain Libraries (other than District Libraries) ... ...

(Sd.)

for Inspector.

மதராஸ் முனிசிபல் கௌன்சில்கள் & ஸ்தல ஸ்தாபனங்களின் இனிஸ்பெக்டர் அவர்களுடைய உத்தரவு நகல்.

22—8—51டயுள்ள எல். டிஸ். நெ. 37568/51 உத்தரவு.

1950-ம் வருஷத்திய மதராஸ் கிராம பஞ்சாயத்து சட்டம் 51-வது செக்ஷன் (1)-வது பிரிவின்படி வாசகசாலைகளை (ஜில்லா வாசகசாலைகள் நீங்கலாக) வைத்து பராமரித்துவரும் பஞ்சாயத்துக்கள் தங்களுக்கு தேவையான பத்திரிகைகளை வெளியனுமதியின்றி வரவழைத்துக்கொள்ளலாம்.

(ஒப்பம்) தெளிவில்லை

இனிஸ்பெக்டருக்காக.

(True copy)

IMPORTANT ANNOUNCEMENT

We have decided to open a new section " *Where to By, what to sell* from January 1953. The names and addresses of the manufacturers, distributors and dealers on Agricultural implements, machinery seeds, plants, insecticides etc. etc. will be published every month for a charge of Rs. 15 per year payable in advance,

For Particulars :—

MANAGER, KRISHIKAN.

சந்தாதாரர்களுக்கு முக்கிய அறிவிப்பு

எல்லா பழைய புதிய சந்தாதாரர்களுக்கும் நமது பொங்கல் பரிசாகிய "கிருஷிக்" பௌண்டன் பேனாவை அனுப்ப தீர்மானித்திருப்பதால் பழைய சந்தாதாரர்கள் புதுவருட சந்தாவுக்கு குறையும் பாக்கி சந்தா துகையையும் தபால் செலவுக்கு 0—11—0 வும் சேர்த்து 30—11—52க்குள் அனுப்பிவைப்பதுடன் புதிய சந்தாதாரர்களையும் சேர்த்தனுப்ப கோறப்படுகிறார்கள்.

தபால் செலவுக்கு அனுப்பாத புதிய சந்தாதாரர்கள் தபால் ரிஜிஸ்டர் செலவுக்கு 0—11—0 வையும் M. O. மூலம் 30—11—52க்குள் அனுப்பிவைக்க கோறப்படுகிறார்கள்.

மானேஜர், "கிருஷிகன்".

A LINK

Between Producer and Consumer

is

An advertisement in

KRISHIKAN

A Tamil Popular monthly

on Agricultural and Rural Development.

For Particulars:—

Manager, Krishikan, Payirthozil Pannai.

HANUMANTHAPURAM, ANNIYUR P. O.,

கிருஷிகன்

(கிராம முன்னேற்ற பத்திரிகை)

(இது பயிர்த்தொழில் பண்ணை வெளியீடு)

ஆசிரியர் :

A. S. வெங்கட் ராவ்

சந்தா விபரம்

வருட சந்தா	ரூ.	3—0—0
மாதிரி பிரதி	ரூ.	0—5—0

விளம்பர விகிதம்

முழு பக்கம்	ரூ.	35—0—0
அரைப்பக்கம்	,,	20—0—0
கால் பக்கம்	,,	10—0—0

நீண்ட கால விளம்பரத்திற்கு குறைந்த கட்டணம்.

மானேஜர்

கிருஷிகன்

பயிர்த்தொழில் பண்ணை

ஹனுமந்தபுரம்

அன்னியூர் P. O., விழுப்புரம் S.I.R.

கிருஷிகன்

பொங்கல் & குடியரசு மலரின் விசேஷ பொருளடக்கம்

1. தலையங்கம்
2. லக்ஷியமும் ஆதரவும்
3. அரசியல் அரங்கம்
4. சாலை வளர்ப்போம் நல்ல சோலை வளர்ப்போம்
5. காடு செழித்து நாடு வளம்பெற மரம் நடுவோம் வாரீர்
6. உணவு உற்பத்தி பெருக கிராமத்துக்கொரு பண்ணைத் திட்டம்
7. அழிந்த காடுகளை ஆக்கும் நாடுகள்
8. விஞ்ஞானமும் விவசாய ஆராய்ச்சியும்
9. எதிர்கால சுபிக்ஷத்திற்கு இன்று மரம் நடுவோம்
10. பாதாள கங்கை
11. காட்டு வளமே நாட்டு வளம்
12. வாழ்க்கை சக்கரம்
13. வனவளம் தரும் தொழில் வளம்
14. க்ஷயரோகமும் இயற்கை வைத்தியமும்
15. மரமோ – மரம்
16. உங்களுக்கு தெரியுமா?
17. தேவலோகத்தில் வனமகோத்சவம் (நாடகம்]
18. நமது கடமை
19. உணவும் ஆராய்ச்சியும்
20. நமது களஞ்சியம்

மற்றும் பல அம்சங்கள்

கிருஷிகனில் வெளியாகும் கதைகள், கட்டுரைகள், நாடகங்களில்வரும் பெயர்களெல்லாம் கற்பனையேயன்றி அவை எவரையும் குறிப்பிடுபவைகளல்ல.

ப—ர்.



உதிர்ந்த மணிகள்

கிராம சுயராஜ்யம்

"ஒவ்வொரு கிராமமும் தன்னுடைய தேவைகளுக்கு மற்றவர்களை எதிர்பார்க்கும் நிலைமையின்றி சுதந்திரமாக வாழ்வதே கிராம சுயராஜ்யம் என்பது என் கருத்து. முதலாவதாக ஒவ்வொரு கிராமமும் தனக்கு தேவையான உணவுப்பொருள்களையும், உடைக்கு வேண்டிய பஞ்சையும் உற்பத்தி செய்து கொள்ளவேண்டும். பிறகு கால்நடைகள் அவைகளுக்கு தேவையான தீனி. பாலர்முதல் விருத்தாப்பியர்வரை கல்விகற்க பள்ளிகள், விளையாட பொழுதுபோக்க வசதியான இடங்கள், கிராம நாடக, பொதுமேடைகள், சுத்தமான குடித்தண்ணீர் முதலிய வசதிகளையெல்லாம் பெருக்கிக்கொள்ளவேண்டும் ஒவ்வொரு கிராமவாசியும் குறைந்தது (கட்டாயமாக) மத்தியதர கல்வியாவது கற்றிருக்கவேண்டும். இவைகளெல்லாம் வெற்றிபெற வேண்டுமானல் கிராம மக்கள் தங்கள் தேவைகளை கூட்டுறவு அடிப்படையிலே சேர்ந்து உழைப்பதின்மூலம்தான் அடையலாம் என்பது என் எண்ணம். ஆகவே மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு உழைப்பதின்மூலம் குடியரசு இந்தியாவில் ஒவ்வொரு கிராமமும் பொருளாதார, சமூக விடுதலையடைந்து, சுயராஜ்யம் பெற்றதின் பலனை நாம் (கிராமவாசிகள்) அனுபவிக்கவேண்டுமென்பதே என் அபிலாஷை".

—மகாத்மாஜி.

THE KIRUSHIKAN

A Tamil Monthly Journal Devoted to Agriculture and Rural Welfare

கி ரு ஷி க ன்

(கிராம முன்னேற்றப் பத்திரிகை)

"இரவார் இரப்பார்க் கொன்றீவர் கரவாது
கை செய்தூண் மாலையவர்" —குறள்.

புதிய கதிர் 1	நந்தன௵ ஐப்பசி, கார்த்திகை, மார்கழி	மணி 1

அக்டோபர் 2

நமது அடிமைத்தளையை அறுத்து சுதந்திரமளித்த அண்ணல் மகாத்மாஜியின் பிறந்த தினத்தை கொண்டாடும் நாம் அவரது அபிலாஷைகளை பூர்த்திசெய்ய பாடுபடுவதுதான் முக்கிய கடமையாகும்.

அவரது அபிலாஷைகளில் முக்கியமானது கிராமங்களைப் பற்றியதே. கிராம மக்களைப்பற்றியதுதான். அதாவது ஒவ்வொரு கிராமவாசியும், ஒவ்வொரு கிராமமும் சுதந்திரமாக வாழவேண்டுமென்பதாகும். தனக்கு வேண்டிய உணவு, உடை, குடிநீர், கல்வி, சுகாதாரம், பொழுதுபோக்கு முதலிய எல்லா தேவைகளையும்பெற்று பொருளாதார, சமூக, சுதந்திரமடைந்து வாழ்வதேயாகும்.

ஆகவே இத்துறையிலே ஒவ்வொரு கிராமவாசியும் கிராமமும் சுதந்திரமெய்தி இன்ப வாழ்க்கை நடத்த பாடுபட்டு அண்ணல் காந்திஜியின் அபிலாஷையை பூர்த்தி செய்வோமென உறுதிகொள்வோமாக.

இலக்ஷியமும் ஆதரவும்

இது புதிய உருவில் வெளிவரும் கிருஷிகளின் முதல் இதழ். தமிழ்நாட்டு கிருஷிகர்களுக்காக கிருஷிகர்களைப் பற்றி கிருஷித்தொழில் வளர்ச்சிக்கு கிருஷிகர் வாழ் கிராம முன்னேற்றத்திற்கென கிருஷிகனாலேயே வெளியிடப்படும் கிருஷிகன் பத்திரிகை இது.

இன்று

உயிர்வாழ இன்றியமையாத
உணவை உற்பத்திசெய்பவன் கிருஷிகன்

உணவு உற்பத்திக்கு தீட்டப்பெறும் பல திட்டங்களும், கண்டுபிடிக்கப்படும் புதிய முறைகளும் வெற்றிபெற பயன்படுத்தி நாட்டுக்கு பயன்பட செய்ய வேண்டியவனும் கிருஷிகன் தான்.

உணவு உற்பத்தி குறைந்து பஞ்சம், பட்டினி, ஏழ்மை இவைகளால் மக்கள் மடிந்து நாடு சீரழிவதா அல்லது உற்பத்தி பெருகி பொருளாதாரம் உயர்ந்து மக்கள் சுபிட்சமடைந்து நாடு உயர்நிலைமை யடைவதா என்பதை முடிவு செய்யவேண்டியவனும் கிருஷிகனே தான்.

ஆனால்

இன்று அவன் நிலைமையென்ன? வரட்சி, பூச்சி, நோய், காற்று, மழை முதலிய இயற்கையின் சோதனைகளுக்கிடையே போதிய உணவுஇன்றி, உடையின்றி வசிக்க இடமின்றி எலும்புந்தோலுமாக இரவுபகல் உழைத்து உணவை உற்பத்திசெய்து நாட்டிற்கு உணவளித்து வருகிறான் கிருஷிகன். தன்னலம் கருதினானில்லை; தனக்கென வைத்துக்கொண்டானில்லை; விளம்பரம் வேண்டினானில்லை விழலுக்கிறைத்த நீர்போல் உழுது பயிரிட்டு கிடைத்ததை கடனுக்கும் வரிகளுக்கும் கொடுத்து ஏங்கி நிற்கிறான் ஏழை கிருஷிகன்.

அவனுடைய தேவைகளோ பல. உண்ண நல்ல உணவு, உடுக்க போதிய உடை; இருக்க வசதியான இடம்; படிக்க பள்ளிகள்; பகுத்தறிவை வளர்க்க வாசகசாலைகள் நாட்டின் நிலையறிய நல்ல பத்திரிகைகள்; நாலா பக்கங்களுக்கும் போக போக்குவரவு வசதிகள்; விவசாயம் பெருக வேண்டிய சாதனங்கள் ஆகியவைகளே

இவைகள் எல்லாம் இப்போது இருக்கின்றனவா?

இந்த நிலமையிலேயே 100-க்கு 80 சதம் கிருஷித்தொழிலையே ஆதாரமாகக்கொண்ட கிருஷிகர் வாழ் கிராமங்கள் நிறைந்த நம் கிருஷி நாட்டிலே

அவர்கள் குறைகளை எடுத்துக்கூற; அவர்கள் நிலையை விளக்க; அவர்களின் தேவைகளை வெளியிட அவர்களுக்கென ஒரு பத்திரிகை இல்லாதது பெருங் குறையே. இந்தக் குறையை ஒருவாறு நிவர்த்திப்பதுதான் நமது கிருஷி கன் இலக்ஷியம்.

கிருஷிகன் என்று பெயரளவில்மட்டுமில்லாது கிருஷிகர்களுக்காகவோ (அ) கிருஷித் தொழிலுக்காகவோ மட்டுமில்லாது கிருஷிகர்களுடைய பத்திரிகையாகவே இருக்கவேண்டுமென்றுதான் கிருஷிகன் அவா இந்த அவா சித்திபெற வேண்டுமானல் முக்கியமாக கிருஷிகர்களின் ஆதரவு தேவை.

அதாவது :—கிருஷிகர்களுக்காக கிருஷிகர்களால் எழுதப்படும் கிருஷித் தொழில், கிராம முன்னேற்ற சம்பந்தமானவையெல்லாம் இதில் இடம் பெறும். இன்னும் நம் நாட்டில், நமது சர்க்கார், தலைவர்கள், விஞ்ஞானி கள், ஆராய்ச்சியாளர்கள், முற்போக்கு விவசாயிகள் இவர்களெல்லாம் அதிக உணவு உற்பத்திக்கு செய்துவரும் புதிய முயற்சிகள், சுலபமாகவும், சிக்கன மாகவும் செய்யக்கூடிய புதிய முறைகள், கருவிகள், லாபகரமான திட்டங் கள் ஆராய்ச்சிகள் ஆகியவைகளையெல்லாம் கிருஷிகர் நிலை உயர்வுக்குப் பயன்படும்படி கிருஷிகனில் வெளியிடுவது முதல் நோக்கம்.

உலக அரங்கிலே கிருஷிகர் என்னென்ன செய்கிறார்கள்; நம் நாட்டிலே கிருஷிகர் என்ன செய்கிறார்கள்; இன்னும் செய்யவேண்டியவை எவை? எம்முறைகள் லாபகரமானது, அவைகளால் ஏற்படும் பலன்களை தெரிந்து தாங்களும் கையாண்டு மற்றவர்களும் நன்மை தீமைகளை தெரிந்து அதனை கையாள கிருஷிகர்மூலம் வெளியிடுவது இரண்டாவது நோக்கம்.

இன்னும் கிருஷிகர் முன்னுள்ள பிரச்னைகளோ பல அவர்களுக்குள்ள குறைகள், கஷ்டங்கள், தேவைகளும் பல. அவர்களுடைய குறைகளை தீர்க்க இடையூறுகளை நிவர்த்திசெய்ய, கஷ்டங்களை களைய, தேவைகளை தேடிக்கொடுக்க உதவி செய்வதே மூன்றாவது நோக்கம்.

ஆனல் இவைகளுக்கெல்லாம் கிருஷிகனே பரிகாரம்செய்ய முடியா விட்டாலும், அவைகளை தீர்த்து பரிகாரம் செய்யக்கூடியவர்களுக்கு எடுத்துக் கூறி அதன்மூலம் பரிகாரம் காண உதவி செய்வான் கிருஷிகன்.

இந்த நோக்கங்கள் சரியானதும் கிருஷிகர்களுக்கு உபயோகமுள்ளது யென்றும் கருதுகின்றான் கிருஷிகன். நீங்களும் அவ்வாறே கருதுவீர்கள் என்று நம்புகிறான். ஆனல் நீங்கள் அவ்விதம் எண்ணுவதோடுமட்டுமில்லா மல் கிருஷிகனின் இந்த நோக்கங்கள் ஈடேற—வெற்றிபெற நீங்களும் உதவி செய்வதின்மூலம்தான் பூர்ணமாக சித்திபெறக்கூடும்.

கிருஷிகர்நிலை உயர்ந்து உற்பத்திபெருகி, கைத்தொழில் வளர்ந்து, மக்கள் சுபிட்ச வாழ்க்கையடையச் சேவை செய்வதே கிருஷிகன் லக்ஷியம். இந்த லக்ஷியம் சித்திபெறவேண்டுவது கிருஷிகர் ஆதரவுதான்.

ராஜாஜி வாழ்க!



நமது பிரதமர் ராஜாஜிக்கு 74-வது வயது பிறந்த தினம் கொண்டாட ஏற்பாடு செய்து வருவதை அறிய மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். மத்திய அரசாங்கத்தில் மிக உயரிய பதவிகள் கிடைத்தும் மகிழ்ச்சியடையாத ராஜாஜி—இம்மாகாண நிர்வாகத்தை மகிழ்ச்சியோடு ஏற்று தன் மாகாணத்திற்கு—மாகாண மக்களின் நலனுக்கு நன்மை செய்வதே லக்ஷியமென, தன் தள்ளாத வயதில் உழைத்துவருவது சொந்த மாகாண—மக்களின்பால் அவருக்குள்ள ஆழ்ந்த அபிமானத்தையே காட்டுகிறது. அதிலும் அவர் விவசாயிகளின்பால் மிகவும் அனுதாபமுள்ளவரென்றால் மிகையாகாது. குறிப்பாக 1937-ல் அவர் மந்திரி பதவி ஏற்றதும் விவசாயிகளை கடன் பளுவிலிருந்து விடுதலை செய்தார். மீண்டும் 1952-ல் பதவியேற்றதும் கண்ட்ரோல்—கொள்முதல் முதலையின் வாயிலிருந்து விடுதலை செய்தார். மேலும் விவசாயிகளின் அல்லல்கள் பல உள்ளனவென்பதை அவர் அறிவார் தீர்க்க தரிசனத்துடன் அவைகளை தீர்த்துவைப்பார் என்றே நம்புகிறோம். அவைகளை நடத்திவைக்க நீண்ட ஆயுள்—திட சித்தம்—ஆரோக்கியம் அவருக்களிக்க ஆண்டவனை பிரார்த்திப்பதுடன் கிருஷிகன் நேயர்கள் சார்பில் நன்றி செலுத்துகிறோம், வாழ்த்துகிறோம்.

ஒரு அரசியல் கக்ஷியின் வாழ்வுக்கும் தாழ்வுக்கும் விவசாயிகளின் சக்தி தான் முக்கியம் என்பதை கடந்த பொது தேர்கல் தெளிவாக்கிவிட்டது. சென்ற ஆண்டுகளின் நிர்வாகத்தில் கொள்முதல், கண்ட்ரோல் இவைகளால் பெரிதும் பாதிக்கப்பட்ட கிருஷிகர்களின் ஆதரவின் குறைவால் நம் மாகாணத்தில் பெரிய மாறுதல்களை உண்டாக்கிவிட்டது சென்ற பொது தேர்தல். இதுவே எதிர்காலத்திலும் எல்லா அரசியல் கக்ஷிகளுக்கும் ஒரு படிப்பினையாக இருக்குமென்பது நமது திடமான அபிப்பிராயம். ஆகவே கிராமங்கள்—விவசாயிகள் சம்மந்தப்பட்ட எந்த பிரச்னையையும் நன்கு கவனித்து தீர ஆலோசித்து பெருமளவில் விவசாயிகளை பாதிக்காதபடி அமுலுக்கு கொண்டுவருவது அவசியமென எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

நிதானம் வேண்டும் !

தமிழ்நாடு உழைப்பாளி கட்சி சட்டசபை மெம்பர்கள் சமீபத்தில் கூடி சர்க்கார் (காங்கிரஸ்) கக்ஷியோடு எப்படி ஒத்துழைப்பது என்று ஆலோசித்திருப்பதாக அறிந்து மகிழ்ச்சியடைகிறோம்—வரவேற்கிறோம். த. உ. கட்சி பொதுவாக தென்னாற்காடு ஜில்லாவில்தான் இருக்கிறதென்பதையும் அதிலுள்ள சட்டசபை மெம்பர்கள் பெரும்பாலும் பழைய வ. கு. க்ஷத்திரிய சங்கத்தை சேர்ந்தவர்களே யென்பதும் யாவரும் அறிவர். இந்த சங்கம் எதற்காக ஏற்பட்டது—தேர்தலில் ஏன் போட்டியிட்டது என்பதும் அறிந்ததே. ஆனால் தேர்தலுக்குப்பின் ஷை கட்சி தன் லக்ஷியங்களை மறந்துவிட்டதோவென சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. பதவிக்காகவே கட்சி சிருஷ்டிக்கப்பட்டிருந்தால் பதவிக்காலத்துடன் கட்சியும் மறைந்துவிடும் அல்லது உழைப்பாளிகளின் முன்னேற்றத்திற்காகவே அமைக்கப்பட்டதாயின் பொது மக்களுடன் தொடர்பேற்படுத்திக்கொண்டு அவர்களின் முன்னேற்றத்திற்காக உழைப்பது அவசியம். கடந்த சில ஆண்டுகளாக இந்த ஜில்லாவில் மக்கள் படும் கஷ்டம் அளவற்றது. அதிலும் குறிப்பாக வன்னியகுல ஏழை மக்கள் படும் கஷ்டம் சொல்ல முடியாது ஆகவே தென்னாற்காடு ஜில்லா (த. உ. க.) சட்டசபை அங்கத்தினர்கள் உடனடியாக தங்கள் தொகுதிகளுக்கு நேரில் சென்று மக்களின் கஷ்டங்களையும் தேவைகளையும் தெரிந்து, ஆவனசெய்ய தக்க முயற்சியெடுப்பது மிகவும் அவசியமும் அவசரமுமாகும்.

நல்ல முடிவு !

இதற்கு அவர்கள் சர்க்காரின் எதிர் கக்ஷியாக ஒதுங்கி நின்றுகொண்டிருப்பதைவிட சர்க்காருடன் ஒத்துழைத்து தம் தம் தொகுதிகளில் உள்ள மக்களின் கஷ்டங்களுக்கு பரிகாரமும், தேவைகளுக்கு வழிமுறையும் காண வேண்டுமெனத்தான் மக்கள் விரும்புகின்றனர். இது விஷயத்தில் த. உ. க. சட்டசபை அங்கத்தினர்கள் தாமதமின்றி முடிவுசெய்து மக்களின் கஷ்டங்களைப்போக்க முயற்சிப்பார்களென எதிர் பார்க்கிறோம் ஆகவேதான் ஷை நல்ல முடிவை ஆதரிக்கிறோம் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

1952-ம் ஆண்டும் முடிவடைந்துகொண்டிருக்கிறது. ஆனால் 1951-ம் ஆண்டே பரவாயில்லையென்று மக்கள் சொல்லுமளவுக்கு நிலைமை மோசமாகி வருகிறது. இந்த ஆண்டில் பருவமழை முதலிலிருந்தே தவறிவிட்டதால் புன்சை மகசூல்களும் தவறிவிட்டது நன்சை நிலங்களும் பெருமளவில் சாகுபடியாகாமலே தரிசாக இருப்பதால் அடுத்த ஆண்டு இந்த ஆண்டைவிட கடும் சோதனை காலமாக இருக்குமென் பயப்படுகிறோம். காலம் கடந்துவிட்டதால் இனி மழை பெய்தாலும்கூட பூரணவும் சாகுபடியாகுமா—மக்கள் பஞ்சம் தீருமா என்பதே சந்தேகமாக உள்ளது. இன்று மக்கள் பெருவாரியாக புண்ணாக்கை தின்று காலம் கழித்துவருகிறார்கள். அந்த புண்ணாக்கைகூட வாங்கமுடியாமல் பலர் பட்டினி இருக்கிறார்கள் என்று சொன்னால் மிகையாகாது. இந்நிலைமையில் சர்க்கார் கஞ்சிதொட்டிகள் மட்டும் திறப்பதில் பலனில்லை. கிராமவாசிகளுக்கு வேலை கொடுக்க—எதிர் காலத்தில் கிராமங்களை வளமாக்க—பெருவாரியாக பெரிய, சிறிய நீர்ப்பாசன வேலைகளும், போக்குவரவு பாதைகளும் ஆரம்பித்து நடத்துவதுடன், உடனடியாக உணவு உற்பத்தி செய்ய போதிய நீர்ப்பாசன சாதனங்களை கொடுத்து உதவிசெய்வது அவசியமாகும்.

கடும் சோதனை.

இவ்வித திட்டத்தில் சிறு விவசாயிகளை புறக்கணிக்கக்கூடாது. அவர்களுக்கு ஊக்கமளிப்பதின்மூலம்தான் உணவு பஞ்சத்தை ஒருவாறு சமாளிக்க இயலும். உத்தரப் பிரதேசத்தில் சிறு விவசாயிகளுக்கென 30 ஆயிரம் பர்சியன் சக்கரம் என்னும் கவலைகளை 5 வருஷங்களில் வாங்கி கொடுக்க திட்டமிட்டு நடத்தியுள்ளார்கள். மத்திய பிரதேசத்தில் 5 வருட தவணைக்கு தக்காவிக் கடன்கள் கொடுத்து வருகிறார்கள். உணவு உற்பத்தி செய்பவர்களுக்கும் முதல் நான்கு தவணைகளை ஒழுங்காக செலுத்துபவர்களுக்கும் கடைசி தவணை (20% சதம்) மான்யமாக கொடுத்து வருகிறார்கள் என்றும் அறிகிறோம். ஆகவே இவ்வித திட்டங்களில் சிறு விவசாயிகளுக்கு உதவி செய்வதின்மூலம் உணவு உற்பத்தியை பெருக்கவும் கால் நடைகள் விருத்தியாக்கவும் முடியுமென்பதையும் இதனால் இக்கடும் சோதனையை ஓரளவு சமாளிக்கமுடியுமென்றும் வற்புறுத்தி கூற விரும்புகிறோம்.

TAPTI NO. 2





இக்கவலைகள் காந்தவாவிலுள்ள C. P. இண்டஸ்டிரீஸ் (C. P. Industries Ltd., Khandwa) லிமிடெட்டாரால், உயர்தர சாமான்களைக்கொண்டு மிகவும் உறுதியாக செய்யப் பட்டிருக்கிறது. மேலும் அதிக பாரமில்லாமலும், சுலப மாகவும், துரிதமாகவும், நீண்டகாலம் வேலை செய்யும்படி ஒவ்வொரு சுழலும் பாகத்திலும் பால்பேரிங்குகள் பொருத் தப்பட்டிருக்கின்றன. விவசாயிகள் தங்களிடமுள்ள எருது களைக்கொண்டே சிக்கனமாக நீர்பாய்ச்சி அதிக உணவு உற்பத்தி செய்வதற்கு ஏற்ற சாதனமாகும்.

இதர விபரங்களுக்கு நேரிலோ தபால் மூலமோ விசாரிக்கவும்.

பயிர்த்தொழில் பண்ணை

(சென்னை ராஜ்ய வினியோகஸ்தர்கள்)

ஹனுமந்தபுரம் :: அன்னியூர் போஸ்டு

விழுப்புரம் S. I. R.

விழுப்புரத்தில் விசாரிக்கும் இடம்:—

கீழ் ஹனுமார்கோவில் வீதி, விழுப்புரம் S. I. R.

"விவசாயிகள் மின்சாரத்தையே நம்பி இருப்பதும் மாடுகளைக் கைவிடுவதும் அபாயகரமானது"—ஸ்ரீ ராஜாஜி.



ஆகவே எவரும் எளிதில் கையாளக்கூடிய

நர்மதா தப்தி காவேரி

பால்பேரிங்

பக்கட் (Persian wheel) கவலைகளால்

அதிக உணவு உற்பத்தி செய்யுங்கள்

உறுதியான அமைப்பு! நீடித்த உழைப்பு!

நரண்டு கிடைக்காத கஷ்டமில்லை

எண்ணை இல்லாத தொல்லையில்லை

இயந்திர நுட்ப கஷ்டமில்லை.

1. மணிக்கு 5000 முதல் 15000 காலன்வரை தண்ணீர் இறைக்கலாம், 2. ஒன்று அல்லது இரண்டு எருதுகள் போதுமானது. 3. 5 அடி அகலம் முதல் 50 அடி ஆழம்வரை உள்ள கிணறுகளுக்கு ஏற்றது. 4. இதர கவலைகளைப்போல் சங்கிலி, நீராழி கம்பி தேவையில்லை. 5. இணைப்பதற்கும் எளிதானது, எருதுகளுக்கும் இலகுவானது.

இனும்! இனும்!! இனும்!!!

கிருஷிகன் நேயர்களுக்கு பொங்கல் பரிசுகள்!

கிருஷிகனுக்கு

நீங்கள் சந்தாதாரராக சேர்ந்துவிட்டீர்களா?

இல்லையேல்

இன்றே சந்தாதாரராக பதிவு செய்துகொள்ளுங்கள்

வருட சந்தா ரூபாய் மூன்றுதான்

31—12—52-க்குள் பதிவு செய்துகொள்ளும்

சந்தாதாரர்களுக்கு மட்டும்

கிருஷிக் பௌண்டன் பேனு & 1953 கிருஷிகன் காலண்டர்

பொங்கல் பரிசாக அனுப்பப்படும்.

கிருஷிகன் நேயர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

கிருஷிகன் பத்திரிகைக்கு 31—12—52க்குள்

ஆறு சந்தாதாரர்களை சேர்த்து அனுப்புகிறவர்களுக்கு

"கிருஷிக்" பௌண்டன்பேனு & 1953 கிருஷிகன்

காலண்டர் ஒரு வருடத்திற்கு கிருஷிகனும்

இனமாக அனுப்பப்படும்.

குறிப்பு:—பரிசுகள் நந்தனஹு தைமீ பொங்கல் மலருடன் அனுப்பிவைக்கப்படும். தபால் ரிஜிஸ்டர் செலவுகளுக்கு *0—11—0* சேர்த்தனுப்பவேண்டும்.

(இவை பயிர்த்தொழில் பண்ணை வெளியீடுகள்)

இதர விபரங்களுக்கு:—

பயிர்த்தொழில் பண்ணை

ஹனுமந்தபுரம் :: அன்னியூர் P. O., :: விழுப்புரம் S. I. R.

இலவச கூப்பன்

1. பெயர்
விலாசம்

2. பெயர்
விலாசம்

3. பெயர்
விலாசம்

4. பெயர்
விலாசம்

5. பெயர்
விலாசம்

6. பெயர்
விலாசம்

மேலே கொடுக்கப்பட்டிருக்கும் நேயர்களை கிருஷிகன் பத்திரிகைக்கு சந்தாதாரர்களாக சேர்த்துக்கொண்டு அவர்களுக்கு பத்திரிகையை அனுப்பிவரக் கோருகிறேன். சந்தா துகை ரூ.

மூலமாக அனுப்பியுள்ளேன். பெற்றுக்கொண்டு, எனக்கு ஒரு ஆண்டுக்கு பத்திரிகையும் கிருஷிகன் பேனாவையும் அனுப்பிவைக்க கோருகிறேன்.

(ஒப்பம்)

பெயர்

விலாசம்

குறிப்பு:—இந்தக் கூபனுடன் சந்தா துகை அனுப்பியதற்கான M. O. ரசீது விபரம் குறித்தனுப்பவேண்டும்.

10 வருட தவணையில் பக்கட் கவலைகள் வாங்க பதிவு செய்துகொள்ளும் மனு

பெயர் தகப்பன் பெயர் விலாசம்	
மனுதாரருக்குள்ள ஸ்தாவர ஜங்கம சொத்துக்களின் பூரா விபரங்கள் மதிப்பு—விஸ்தீரணம்.	
கடன்கள் :— சர்க்கார் கூட்டுறவு சங்கம் வெளியில்	
சொத்தில் உள்ள பாத்தியதை இதர பாகஸ்தர்கள்.	
கவலைபோட விரும்பும் புலத்தின் சர்வே விஸ்தீர்ணம், வீபரம்.	
கிணறு வட்டமா — சதுரமா அளவு, ஆழம், தண்ணீர் மட்டம், பாயவேண்டிய விஸ்தீர்ணம் முதலியன.	

நான் ஷை இத்திட்டத்தின் பூரா நிபந்தனைகளையும் தெரிந்துகொண்டேன். அவைகளுக்கு கட்டுப்பட்டு நடக்க சம்மதிக்கிறேன். இத்துடன் பதிவுக்கட்டணம் 0--8—0 அனுப்பியிருக்கிறேன். மேலே கொடுத்திருக்கும் தகவல்கள் பூராவும் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் உறுதி கூறுகிறேன்.

தேதி : கையொப்பம்.

N. B. மேலும் விபரம் தேவையுள்ளோர் பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

(நிபந்தனைகளுக்கு பின்புரம் பார்க்க)

நிபந்தனைகள்

1. பகுதி 1-க்கு 200 மெம்பர்கள் வீதம் 5 பகுதிகள் கொண்ட 1000 மெம்பர்கள்தான் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள்.

2. ஒவ்வொருபகுதியும் பூர்த்தியானவுடன் ஏலம் ஆரம்பிக்கப்படும்.

3. பிரதிமாதமும் ரூ. 6—12—0 வீதம் 120 மாதங் களுக்கு சந்தா செலுத்திவரவேண்டும். பிரவேசக்கட்ட ணம் ரூ. 5, பதிவுக்கட்டணம் 8 அணவும் செலுத்த வேண்டும்.

(a) சந்தா துகையை மூன்று மாதம், ஆறு மாதம் அல்லது வருடத்துக்கு ஒரு தடவையாகவும் செலுத்தலாம்.

4. பிரதிமாதமும் கடைசி தினம் ஏலம் விடப்படும். பகுதி ஒன்றுக்கு ஒருவர் வீதம் (5 நபர்களுக்கு) 5 கவலை கள் வழங்கப்படும்.

5. பிரதி மாதமும் குறைந்த துகைக்கு (அதிக துகை தள்ளி கேட்பவர்களுக்கு) ஏலம் முடிவு செய்யப் படும்.

6. ஏலம் கோருகிறவர்கள் நிர்வாக செலவிற்கு 5% வட்டிக்காக ரூ. 5% சேர்த்து (அதாவது ரூ. 900-க்கு) முதல் கேள்வியாக கேழ்க்கவேண்டும். ஒருவரும் ஏலம் கோராதபக்ஷத்தில் சீட்டு குலுக்கி நிர்ணயிக்கப்படும்.

7. ஏலத்திலோ சீட்டு குலுக்குதலிலோவெற்றிபெற்ற வர் ஏலத்துகைக்கும் கவலையின் கிரயத்துகைக்கும்உள்ள வித்தியாசத்தை செலுத்தி, போதிய ஸ்தாவரசொத்தை ஈடாக கொடுத்து கவலையை டெலிவரி எடுத்துக்கொள்ள வேண்டும்.

(உ-ம்.) ஒருவருக்கு ரூ. 815க்கு ஏலம் முடிவாகி யிருந்து கவலையின் கிரயம் ரூ. 1000 ஆக இருந்தால் அவர் ரூ. 185 செலுத்தி ஈடு தஸ்தாவேஜ் எழுதிக்கொடுத்த வுடன் கவலை டெலிவரி கொடுக்கப்படும்.

8. ஏலம் எடுத்தபிறகு பாக்கியுள்ள மாதங்களுக்கு ரூ. 6—12—0 வீதம் ஒழுங்காக செலுத்திவந்தால் ஷை கடன் பைசலாகி கவலே சொந்தமானதாகிவிடும்.

(உ-ம்.) 120 மாதங்களுக்கு	ரூ.	810
வித்தியாசத்துகை	,,	185
வட்டியுள்பட செலுத்தும் மொத்தம் ரூபாய்		905

9. குறிப்பிட்ட தேதிக்குள் சந்தா செலுத்தாதவர்கள் ஏலத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். சந்தா பாக்கியுள்ளவர்களுக்கு அந்த மாத கசர் கொடுக்கப்படமாட்டாது. தவணை தவறிய தேதியிலிருந்து, செலுத்தும்வரையில் நாள் 1-க்கு ரூ. 100-க்கு 6 பை வீதம் அபராதம் சேர்த்து செலுத்தவேண்டும். 3 மீ துடர்ந்து பாக்கியிருந்தால் கணக்கு முடிவுசெய்யப்பட்டு, கவலேயையும் கைப்பற்றி பாக்கி நிலுவையை வசூ லிக்கப்படும்.

13. ஏலம் எடுத்தவர்கள் 6 மீக்கு குறையாத சந்தாவை முன்னதாக (அட்வான்ஸாகவே) செலுத்திவர வேண்டும்.

11. 3மீ ஏலத்தில் கலந்துகொண்டும் வெற்றி பெறாத மெம்பர்கள் தவணைமூலம் கவலேபெற மனு செய்துகொள்ளலாம். அவ்விதம் பெருபவர்கள் 10% போக பாக்கியுள்ள துகைக்கும் கவலேக்குமுள்ள வித்தியாசத்துகையை செலுத்திவிட்டு கவலேயை டெலிவரி எடுத்துக்கொள்ளவேண்டும்.

(a) தவிர பிரதிமாத சந்தா ரூ. 6—12—0 யுடன் 6% வீதம் வட்டியையும் சேர்த்து செலுத்திவரவேண்டும். அதாவது கவலேயின் கிரயம் ரூ. 1000 ஆக இருந்தால் சந்தா ரூ. 6—12—0 யுடன் ரூ. 1000-க்குள்ள வட்டி ரூ. 5 சேர்த்து 11—12—0 வீதம் செலுத்திவரவேண்டும்.

(b) சீட்டு மதிப்பைவிட குறைந்த துகைக்கு கவலையை வாங்கிக்கொண்டால் பாக்கி துகையை டிபாசிட்டாக பாவித்துக்கொண்டு கவலையின் மதிப்புத்துகைக்குமட்டும் தான் வட்டி வசூலிக்கப்படும்.

(c) சீட்டு முடிவுகாலத்தில் வரவேண்டிய பாக்கிகளை கழித்துக்கொண்டு மீதமுள்ள துகையை வாபீஸ் செய்து விடப்படும்.

12. பிரதிமாத ஏலக்கழிவிலிருந்து சீட்டின் மொத்த மதிப்பில் 10% நிர்வாக செலவிற்கு கழித்துக்கொண்டது போக மீதியுள்ள கசர் துகையை ஒருவித பயனும் (ஏலம், குலுக்குதல், தவணை) அடையாத மெம்பர்களுக்குமட்டில் பிரித்துக் கொடுக்கப்படும். தவணை பாக்கி வைத்துக் கொண்டிருக்கிறவர்களுடைய கசர் கம்பெனிக்கு ஆதாய மாக்கப்படும்.

குறிப்பு:—(i) இந்த சீட்டின் முதல் எலம் 31—1—53 நடத்தப்பட்டு கவலைகள் 1953 பிப்ரவரிமீ 10உ வினியோகிக்கப்படுமோதலால் சேர விரும்புகிறவர்கள் 31—12—52க்குள் தங்களை பதிவுசெய்துக்கொள்ள வேண்டும்.

(ii) மனுவுடன் பதிவுக்கட்டணம் 0—8—0 அனுப்பவேண்டும். ஒப்புக் கொள்ளப்பட்டவுடன் தேவையான பாரங்கள் முதலியன அனுப்பிவைக்கப் படும் அவைகளை பூர்த்திசெய்து சந்தா, பிரவேசக்கட்டணத்துடன் திருப்பி அனுப்பவேண்டும்.

(iii) முதல் பகுதி பூர்த்தியாகிவிட்டதாலும் 2-வது பகுதியில் மெம்பர் கள் பதிவாகிக்கொண்டிருப்பதாலும் இன்னும் சுமார் 750 மெம்பர்கள்தான் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

குறிப்பிட்ட காலத்தில் வந்து சேராத மனுக்கள் நிராகரிக்கப்படும். மனுக்களை ஏற்றுக்கொள்ளவும் நிராகரிக்கவும் மானேஜ்மெண்டுக்கு உரிமை யுண்டு.

(v) எவ்வித காரணத்தைக்கொண்டும் பதிவு (அச்சு தபால் செலவு) கட்டணம் 0—8—0யும் வாபீஸ் செய்யப்படமாட்டாது.

மானேஜர் — பயிர்த்தொழில்பண்ணை,

(ஆர்கனைசர்கள்.)

Edited and published by A. S. Venkata Rao (Payirthozil Pannai)
Hanumanthapuram, Anniyur P. O., Villupuram S. I. R.
Printed at the Hanuman Printing Works, Villupuram.

கிருஷிகன் நேயர்களுக்கு ஓர் விருந்து

காடு செழித்து நாடு வளம்பெற

ஏன் ?

எங்கே ?

என்ன ?

எப்படி ?

எப்போது ?

மரங்களை நடவேண்டும்? நட்டபின் பாதுகாத்து வளர்ப்பது எப்படி? அப்படி வளர்ப்பதால் நாட்டில் விவசாயம் கைத்தொழில், பொருளாதாரம் விருத்தியாகி நாடு முன்னேற்றமடையுமா? அதனுல் நாட்டுக்கும் நமக்கும் ஏற்படும் நன்மைகள் எவை? என்பதைப்பற்றிய அரிய கட்டுரைகள், சித்திரங்கள் பலவும் நிறைந்த

கி ரு ஷி க ன்

விசேஷ பொங்கல் & குடியரசு மலர்

இது விவசாயிகளுக்கு மட்டுமன்றி கிராம பஞ்சாயத்து போர்டுகள், கூட்டுறவு சங்கங்கங்கள், வாசக சாலைகள், கல்வி நிலயங்கள், ஜில்லாபோர்டுகள், முனிசிபாலிடிகள், மற்றும் நம் நாட்டின் முன்னேற்றத்தில் அக்கரையுள்ள ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டிய ஒரு பொக்கிஷமாகும்.

(டெமி 1/8 × 100 பக்கங்களுக்குமேல் கொண்டது)

விலை அணு 12 **தபால் செலவு 0—1—9**

உங்கள் பிரதிக்கு இன்றே பதிவு செய்துகொள்ளுங்கள்.

கி ரு ஷி க ன்

(கிராம முன்னேற்ற தமிழ் மாதப் பத்திரிகை)

விவசாயம் கைத்தொழில் கால்நடை கூட்டுறவு, சுகாதாரம் கல்வி முதலிய கிராம முன்னேற்ற சம்பந்தமான கட்டுரைகள், கதைகள் கவிதைகள், நாடகங்கள் பலவும் நிறைந்த தமிழ் மாத வெளியீடு.

பொங்கல் & குடியரசு மலர் உள்பட

வருட சந்தா ரூ. 3 **மாதிரி பிரதி 0—5—0**

விபரங்களுக்கு

பயிர்த்தொழில் பண்ணை

ஹனுமந்தபுரம் : அன்னியூர் P. O. : விழுப்புரம் S. I. R.

விசேஷ அனுபந்தம்

கிருஷிகன்

(கிராம முன்னேற்ற இதழ்)

நாடும் நாமும் செழிக்க

மரம் நடுவோம் வாரீர்!

வருட சந்தா 3 ரூபாய்

பயிர்த்தொழில் பண்ணை
மாத வெளியீடு

தனி பிரதி 4 அணா